# எத்தியோப்பியாவின் அடிஸ் அபாபாவில் உள்ள அத்வா வெற்றி நினைவுச் சின்னத்தில் பிரதமர் மரியாதை செலுத்தினார்

டிசம்பர் 17, 2025

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று அடிஸ் அபாபாவில் உள்ள அட்வா வெற்றிச் சின்னத்தில் மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தினார். 1896 ஆம் ஆண்டு அத்வா போரில் தங்கள் தேசத்தின் இறையாண்மைக்காகத் தங்கள் இன்னுயிரை ஈந்த வீரமிக்க எத்தியோப்பிய வீரர்களுக்காக இந்த நினைவுச்சின்னம் அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. இந்த நினைவுச்சின்னம், அட்வா வீரர்களின் அழியாத உணர்விற்கும், நாட்டின் சுதந்திரம், கண்ணியம் மற்றும் மீள்திறன் ஆகியவற்றின் பெருமைமிக்க பாரம்பரியத்திற்கும் ஒரு அஞ்சலியாகும்.

2. பிரதமரின் இந்த நினைவிடப் பயணம், இந்தியாவிற்கும் எத்தியோப்பாவிற்கும் இடையிலான ஒரு சிறப்புமிக்க வரலாற்றுத் தொடர்பை எடுத்துக்காட்டுகிறது; அந்தத் தொடர்பு இரு நாடுகளின் மக்களாலும் தொடர்ந்து போற்றி மதிக்கப்படுகிறது.

அடிஸ் அபாபா

டிசம்பர் 17, 2025